

# விடுமுறைகால செயற்றிட்டம் - 01

## தரம் 8 விஞ்ஞானம்

**விடயம்:-** விலங்குப் பாகுபாடு

**செயற்பாட்டுக்கான அறிவுறுத்தல்கள்:-**

- பக்கம் 3 இற் தரப்பட்டுள்ள விலங்குகளின் பாகுபாடு தொடர்பான எண்ணக்கரு விளக்கப் படத்தை டிமை தாளில் / $A_3$ கடதாசியில் பிரதி செய்து பூர்த்தி செய்யுங்கள்.. (இதற்காக மாதக் கலண்டர் தாளின் பின்புறத்தையோ அல்லது வேறு கிடைக்கக்கூடிய தாள்களையோ பயன்படுத்த முடியும்.) உதாரண விலங்குகள் சிலவற்றின் படங்களை ஒட்டுங்கள். அல்லது வரைந்துகொள்ளுங்கள்.
- உங்கள் சூழலிலுள்ள விலங்குகள் 5 ஐ நன்கு அவதானியுங்கள். அவற்றின் இயல்புகளைக் குறித்துக்கொள்ளுங்கள். அவற்றைப் பயன்படுத்தி பக்கம் 2 இல் தரப்பட்ட மாதிரிக்கமைவாக சுவரேடு ஒன்றைத் தயாரித்துக்கொள்ளுங்கள். நீங்கள் அவதானித்த விலங்குகளின் படங்களை வரைந்து கொள்ளுங்கள். அல்லது புகைப்படம் எடுத்து இணைத்துக்கொள்ளுங்கள்.
- விடுமுறை காலம் முடிவடைந்து பாடசாலைக்குச் செல்லும்போது இவற்றை உங்கள் ஆசிரியருக்கு காண்பித்து அவற்றை வகுப்பறையில் காட்சிப்படுத்துங்கள். அல்லது பாடசாலைப் பெயர்ப் பலகையில் காட்சிப்படுத்துங்கள்.

**சுவரேடு – விலங்குகளை அவதானிப்போம். பாகுபடுத்தி மகிழ்வோம்**

**கிளி**

- அருவிக்கோட்டுருவ உடல்
- பச்சை நிற இறகுகளால் மூடப்பட்ட தோல்
- முன்னவயவங்கள் இறக்கைகளாக திரிபடைந்துள்ளன
- பின்னவயவங்கள் கால்களாக உள்ளன
- இடம்பெயரும் முறை – பறத்தல்
- உணவு :- பழங்கள்
- உணவை உட்கொள்ள அலகு காணப்படும்.



**கூட்டம் :- ஆவேஸ்**
**பிரதான கூட்டம் :- முள்ளந்தண்டுளி**

**எண்ணக்கரு விளக்கப் படம் - விலங்குப்பாகுபாடு**

விலங்குகள்

அனலிடா / துண்டப் புழுக்கள்

முள்ளந்தண்டுளிகள்

பிஸெஸ் / மீன்கள்

**இயல்புகள் :-**

- தோல் - செதில்களால் மூடப்பட்டது. உலர்ந்தது. கரடுமுரடாகனது.
- இடப்பெயர்ச்சிக்கு 4 கால்கள் கொண்டவை. சிலவற்றில் கால்கள் பதாங்கம்
- சுவாசம் - சுவாசப்பை மூலமாக

